# IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR

Date : 21.08.2025

SC. 77/2022

**அ.சா 8 – ஈஸ்வரன்**

2025 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21 ம் நாள் **ஈஸ்வரன்** என்பவரின் சாட்சியாக விசாரரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின் படி திரு கிருஷ்ணமூர்த்தி தலைமை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது .

| | | | |
|---|---|---|---|
| பெயர் | **ஈஸ்வரன்** | தந்தை பெயர் | சங்கரன் |
| வயது | 54 | கிராமம் | பொம்மனூர் |
| வட்டம் | பாலக்கோடு | மாவட்டம் | தர்மபுரி |

**முதல் விசாரணை :–**

1. நான் பொம்மனூரில் குடியிருந்து கொண்டு , தற்போது அரசு மது பானக்கடை சூளகிரியில் மேற்பார்வையாளராக பணி புரிந்து வருகிறேன். 31.08.2015 ம் தேதி நானும் ரமேஷ் என்பவரும் செட்டிப்பள்ளி மதுபானக்கடைக்கு ஆய்விற்காக சென்றேன். பின்னர் மாலை 4.00 மணியை போல் புளியரசி காட்டுப்பகுதியில் வந்த போது சூளகிரி காவல் ஆய்வாளர் ஐந்து நபர்களை விசாரித்து கொண்டிருந்தார்கள். எங்கள் முன்னிலையில் ஐந்து நபர்களையும் விசாரித்தார்கள். அப்போது, அவர்கள் 4 மதுபானக்கடையில் வழிப்பறி செய்ததாக வாக்குமூலம் கொடுத்தார்கள். ஆஜர் எதிரிகள் தான் அவர்கள். எதிரிகளிடம் இருந்து tvs apache என்ற வாகனத்தையும் , Discover என்ற வாகனத்தையும் ரூ. 7500 /– ஐயும் மற்றும் இரும்பு ராடு , மற்றும் கத்தி – 1 , செல்போன் –1 ஆகியவற்றை கைப்பற்றினார்கள். ஒவ்வொரு எதிரிகளிடமும் தனித்தனியாக விசாரித்து அவர்களிடம் கையொப்பம் வாங்கினார்கள். எங்களிடமும் கையெழுத்து வாங்கினார்கள்.

2. 1 முதல் 5 வது எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையெழுத்துகள் என்னுடையது ஆகும். அந்த கையெழுத்துகள் முறையே மகஜர் **அ.சா.ஆ 13 முதல் 17 வரையான** ஆக குறியீடு செய்யப்படுகிறது.. 5 கைப்பற்றுதல் மகஜர்களில் உள்ள 2 வது கையெழுத்துக்கள் என்னுடையது தான். அவைகள் முறையே **அ.சா.ஆ 18 முதல் 22** வரையான ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் சான்று பொருட்கள் தான் போலிசார் எதிரிகளிடம் இருந்து கைப்பற்றினார்கள். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

போலிசார் என்னை வரச் சொல்லி தகவல் எதுவும் கொடுக்கவில்லை. செட்டிப்பள்ளில் இருந்து 1 கி.மீ தூரத்தில் காட்டுப்பகுதியில் போலிசார் எதிரிகளை விசாரித்தார்கள். நான் அந்த இடத்திற்கு போவதற்கு முன்பாகவே போலிசார் அங்கு எதிரிகளை விசாரித்து கொண்டிருந்தார்கள். நான் அந்த இடத்திற்கு போவதற்கு முன்பாக போலிசார் என்ன விசாரித்தார்கள் என்று என்னிடம் சொன்னார்கள். போலிசார் விசாரித்ததை தான் நான் நீதிமன்றத்தில் சாட்சியமாக கூறியுள்ளேன். எதிரிகள் சொல்ல சொல்ல அங்கிருந்த போலிசார் தான் ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தார்கள். 5 எதிரிகளிடம் இருந்தும் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். என்னுடன் சாட்சியாக ரமேஷ் என்பவரும் கையெழுத்திட்டார். நான் முதலில் 1 வது எதிரி மஞ்சுநாத் என்பவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தான் முதலில் கையெழுத்து போட்டேன். இந்த கையெழுத்தை நான் மாலை 4.30 மணிக்கு கையெழுத்திட்டேன். மொத்தம் 5 கைப்பற்றுதல் மகஜரில் கையெழுத்திட்டேன். சம்பவ இடத்தில் வைத்து ஒரு கைப்பற்றுதல் மகஜரில் கையெழுத்திட்டேன், அப்போது மாலை நேரம் 4.30 மணி இருக்கும். முதல் கைப்பற்றுதல் மகஜர் கைப்பற்றப்பட்ட இடத்தில் இருந்து சுமார் 2 கி.மீ தூரத்தில் 1 மணி நேரம் கழித்து , போலிசார் ஒரு இரு சக்கர வாகனம், செல்போன். பணம் ரூ. 7500 /– கைப்பற்றினார்கள். அந்த

இடத்தின் பெயர் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. 5 வது கைப்பற்றுதல் மகஜரில் புனுகன் கொட்டாய் என்ற இடத்தில் வைத்து கையெழுத்திட்டேன், அப்போது நேரம்  12.30 மணி இருக்கும்  அங்கு ஒரு செல்போனும் , பணமும் கைப்பற்றினார்கள்.  கைப்பற்றப்பட்ட பணங்களின் வகைகள் எனக்கு ஞாபகம் இல்லை.

2.  செல்போன் விவரமும் எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. செல்போன் எண்களும் எனக்கு தெரியாது. ஞாபகம் இல்லை. ஒரு செல்போன் கருப்பு கலர் , மற்றொரு செல்போன் என்ன கலர் என்று தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. எந்தெந்த எதிரிகளிடம் என்னென்ன பொருட்கள் கைப்பற்றப்பட்டது என்று தற்போது குறிப்பாக ஞாபகம் இல்லை. நான் சம்பவ இடத்திற்கு போகவில்லை என்றாலும் , என் முன்பாக எதிரிகள் யாரும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலும் ,அதேபோல் எந்த பொருட்களும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் ,நான் காவல் நிலையத்தில் தாயார் செய்யப்பட்ட ஆவணங்களில் கையெழுத்து செய்து விட்டு தற்போது, உண்மையை மறைத்து பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Assistant Subordinate Judge,
Hosur